**Starting time 12.35 P.M.**

**<u>IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR</u>**

**O.S. No. 37/2012**

Deposition of **<u>P.W.1</u>** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. K. Janaki, Gr. III Bench Clerk of this court, on 22.11.2023 in accordance with the provision of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : பழனிச்சாமி | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u> என்னுடைய நிலத்திற்கு தென்புறத்தில் உள்ள நிலத்தை பிரகதீஸ்வரன் பாட்டி அப்துல சலாம் என்பவரிடமிருந்து 1981 -ல் கிரயப்பெற்றிருந்தார் என்றால், இல்லை. தாவா சொத்துக்கு தெற்கில் உள்ள பிரதிவாதிகள் நிலம் எனது பாட்டன் காலத்திலிருந்து அவரது அனுபவித்தில் இருந்து வருகிறது. எனக்கும், பிரதிவாதிக்கும் இடைட ஓடையில் தண்ணீர் கொண்டு செல்வது சம்மந்தமாக இதே நீதிமன்றத்தில் அசல் வழகககு எண். 127/2011 நடந்தது என்றால், இல்லை.

2. இதற்கு முன்பாக தாவா சொத்தை நீதிமன்ற ஆணையர் யாரேனும் வந்து பார்த்தார்கள் என்றால், சாட்சி முதலில் பார்த்தார்கள் என்று கூறிவிட்டு பின்னிட்டு பார்த்தார். அசல் வழக்கு எண். 127/2011 நான் தரப்பினர் என்றாலும், அதை ஒப்புக்கொண்டார் இந்த வழக்கு எனக்கு விரோதமாக போய்விடும் என்பதால் மறுக்கிறேன் என்றால், சரியல்ல.

3. 90 செண்ட் நிலத்திற்கு பரிகாரம் கேட்கிறேனா அல்லது இருவரின் நிலத்திற்கும் இடையே இருக்கும் வரப்பில் உள்ள தென்னை மரங்கள் சம்மந்தமாக பரிகாரம்

கேட்கிறேனா என்றால், 90 செண்ட் நிலத்திற்குதான் கேட்கிறேன். 1977-லிருந்து இவ்வழக்கு தாக்கல் செய்யும் காலம் வரையிலும் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட நிலத்தையும் சுவாதீனத்தை கேட்டு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால், கேட்டோம், தருவதாக கூறினார்கள், தராததால் வழக்கு தாக்கல் செய்தோம்.

4. எங்களுக்கு ஏற்பட்ட வருமான இழப்பு சம்மந்தமாக வழக்கு ஏதேனும் தாக்கல் செய்துள்ளோம் என்றால், இல்லை. இந்த வழக்கில் பிரதிவாதிகள் என்ன பதில் போட்டுள்ளார்கள், என்ன ஆவணம் போட்டுளளார்கள் என்பது குறித்து தெரிந்துக்கொண்டேனா என்றால், இல்லை. காண்பிக்காததால் தெரியவில்லை. பிரதிவாதிகள் தரப்பு வழக்கை மறுத்து என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் நான் எதுவும் சொல்லவில்லை என்றால், ஆமாம்.

5. தனசேகரன் இவ்வழக்கில் என்ன பதில் போட்டுள்ளார் என்று தெரிந்துக்கொண்டேனா என்றால், காண்பித்தால்தான் எனக்கு தெரியும். பூதான் போர்ட்டை வழக்கில் தரப்பினாராக சேர்க்காமல் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் வழக்கு தள்ளுபடி கூறியது என்றால், சரியல்ல. பூதான் போர்ட்டு சொத்தை தாவா 90 செண்ட் நிலத்தை என் தகப்பனாருக்கு ஒப்படைத்து காலத்திலிருந்து பிரதிவாதிகள் தான் அனுபவித்து வந்தார்கள் என்றால், சரியல்ல. உரிய காலத்திற்குள்ளாக வழக்கு தாக்கல் செய்யப்படாததாலும வழகசு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றாலும் சரியல்ல. பிரதிவாதிகளின் வழக்கு என்ன என்பது குறித்து எனக்கு தெரியும் என்று சொன்னால் அது பற்றி பல கேள்விகள் எழுப்பபடும் என்பதால் என்னிடம் காண்பிக்கபடவில்லை என்று வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால், சரியல்ல.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

வாதிகள் தரப்பில் மறு விசாரணை இல்லை.

Ending Time: 12.50 P.M.

(ஒப்பம்/- N. திலகேஸ்வரி)
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ.), ஆத்தூர்.